இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை
சென்னை-106

முன்னிலை — திரு.சு.கணேஷ், இ.ஆ.ப.,

ந.க.எண். 003141/அந3/2019 நாள். 19.03.2019

பொருள்: அலுவலக நடைமுறை பிரிவு – இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்குநரகம், சென்னை-106 – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு சென்னை, இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்குநரகத்தில் தட்டச்சராக பணிபுரியும் திருமதி.தே.கன்னியம்மாள் என்பவரின் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:
1. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களின் கடித எண்.5683/PSD – A2/ 2017 நாள்.03.10.2017
2. சென்னை, மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் அவர்களின் கடித எண்.62504/நி2/2/2017–6 நாள்.09.11.2017
3. இவ்வாணையரக பணிநியமனம் மற்றும் பணியமர்த்தல் ஆணை ந.க.எண்.16069/நி2/3/2017 நாள்.21.11.2017
4. திருமதி.தே.கன்னியம்மாள், தட்டச்சராக பணியில் இணைந்த நாள்.30.11.2017

*****

ஆணை:

பார்வை 3–ல் கண்டுள்ள இவ்வாணையரக பணி நியமனம் மற்றும் பணியமர்த்தல் ஆணையின்படி தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட திருமதி.தே.கன்னியம்மாள் என்பவர் சென்னை, இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்குநரகத்தில் தட்டச்சராக 30.11.2017 முற்பகல் முதல் பணியில் இணைந்தார்.

2. பார்வை 1 மற்றும் 2–ல் கண்டுள்ள ஆணையின்படி தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தேர்வு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட தட்டச்சர்களை அவர்கள் பணியில் இணைந்த நாள் முதல் பணிவரன்முறை செய்யலாம் என அறிவுரை பெறப்பட்டுள்ளதால் அன்னார் பணியில் இணைந்த நாளான 30.11.2017 முற்பகல் முதல் தட்டச்சர் பணியிடத்தில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

...2(தபிபா)

3. பார்வை 1–ல் கண்டுள்ள சென்னை, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலாளரின் கடிதத்தின்படி " 2015–2016 ஆம் ஆண்டு, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் குரூப் IV மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட தட்டச்சர்களின் பணிவரன்முறையானது சென்னை உயர்நீதி மன்றம் மற்றும் சென்னை உயர்நீதி மன்றத்தின் மதுரை கிளையிலும் நிலுவையிலுள்ள இத்தேர்வு தொடர்பான வழக்குகளின் முடிவிற்கு உடன்பட்டது " என தெரிவிக்கப்படுகிறது.

4. சென்னை, இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்குநரகத்தில் தட்டச்சராக பணிபுரியும் திருமதி.தே.கன்னியம்மாள் என்பவர் அரசுப் பணியில் சேர்ந்த நாளான 30.11.2017 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்யப்பட்டு தகுதிகாண் பருவத்தில் அமர்த்தப்படுகிறார். மேலும் நடைமுறையிலுள்ள பணி விதிகளின்படி தட்டச்சர் திருமதி.தே.கன்னியம்மாள் அவர்களின் தகுதிகாண் பருவமான இரண்டு வருட காலத்தைத் தொடர்ந்து மூன்று வருட பணிக்காலத்திற்குள் தமிழ்நாடு மருத்துவ விதித் தொகுப்பு மற்றும் கணிப்பொறியில் அலுவலக தானியங்கி (Computer on Office Automation) தேர்வுகளில் தேர்ச்சி பெற வேண்டும் என ஆணையிடப்படுகிறது.

சு.கணேஷ்,
இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி
இயக்குநர்

பெறுநர்

திருமதி.தே.கன்னியம்மாள், தட்டச்சர்,
இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி
ஆணையரகம், சென்னை – 106.

நகல்

1. இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள், சென்னை –600 006
2. நி2(3) பிரிவு
3. பணிப்பதிவேடு
4. முக்கிய ஆணைத் தொகுப்பு

/ உண்மை நகல் / அனுப்பப்படுகிறது / ஆணைப்படி /

உதவி இயக்குநர்

21/3/2018
27/3/2018